என்று நமது மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதனை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றோம். எனவே, அந்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டும் என்று மீண்டும் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்த மின்வழித்தடம் அமைக்கும் பகுதிகளில் ஏற்கெனவே உள்ள நடைமுறைகளின்படி விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்தப் பகுதியினைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு முன்னுரிமை கொடுக்கப்படும்; அதற்கான தீர்வுகள் காணப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 167, மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

167—

மண்பாண்டத் தொழிற்கூடம்

***1816—திரு. A. நல்லதம்பி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், மடவாளம் கிராமத்தில் மண்பாண்டத் தொழிற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2022 ஏப்ரல் 25]

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், மடவாளம் கிராமத்தில் மண்பாண்டத் தொழிற்கூடம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி அவர்கள்.

திரு. A. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட, திருப்பத்தூர் ஒன்றியம், மடவாளம் கிராமம் மற்றும் திருப்பத்தூர் நகரத்தில் ஒரு வார்டு பகுதியில் உள்ள மண்பாண்டத் தொழிலாளர்கள் மழைக் காலங்களில் தொழில் செய்ய இயலாத நிலை ஏற்பட்டு நஷ்டம் ஏற்படுவதுடன், இவர்களது வாழ்க்கை ஆதாரம் பாதிக்கப்படுகிறது. ஆகவே, இங்கு தொழிற்கூடம் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. ஆகையினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அவர்கள் தொழில் செய்ய ஏதுவாக சூளைக் கூடாரம் அமைத்துக் கொடுக்கவும், மண்பாண்டம் தொழிலுக்குப் பயன்படுத்துகின்ற மின்சாரத்தினை இலவசமாக வழங்கியும், பொங்கல் காலங்களில் வழங்குகின்ற பொங்கல் தொகுப்புடன் மண்பாண்டப் பொருட்களான மண் அடுப்பு, பானை போன்றவை மக்களுக்குச் சென்றடையவும் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் மாவட்டத்தில் மண்பாண்டத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஏதும் இல்லை. எனினும், திருப்பத்தூர் ஒன்றியம், மடவாளம் கிராமத்தில் மண்பாண்டம் செய்யும் தொழிலாளர்கள் சிலர் தனித் தனியாக மண்பாண்டத் தொழில் செய்து வருகிறார்கள். அவர்கள் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் சங்கமாகப் பதிவு செய்யவில்லை. இதனால் மடவாளம் பகுதியில் மண்பாண்டத் தொழிற்கூடம் அமைக்க இயலாத நிலை உள்ளது. மடவாளம் கிராம மண்பாண்டத் தொழிலாளர்கள் குறைந்தபட்சம் 25 நபர்கள் ஒன்று சேர்ந்து தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைக்க முன்வந்தால் கூட்டுறவுச்

சங்க விதிகளுக்குட்பட்டு சங்கம் அமைக்க கதர் வாரியம் உதவி செய்யும். மேலும், அச்சங்கத்தின்மூலம் இடம் வழங்கப்பட்டால் மண்பாண்டத் தொழிற்கூடம் கட்ட அரசால் பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி அவர்கள்.*

திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் மாவட்டம் புதியதாக உருவாக்கப்பட்ட மாவட்டம். திருப்பத்தூரை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்ற கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இதன் விற்பனைகளைப் பெருக்கிட, நவீன வசதிகளுடன்கூடிய புதிய கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை உருவாக்க அரசு ஆவன செய்யுமா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ-ஆப்டெக்ஸ் கடைகள் மொத்தம் 154 உள்ளன. அந்த 154 கடைகளில் 49 கடைகள் வேறு மாநிலங்களில் உள்ளன. மீதமுள்ள 105 கடைகள் தமிழ்நாட்டில் உள்ளன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு ஒவ்வொரு கடையாக,* latest-*ஆக எடுத்து, அதன் விற்பனையை* double *ஆக்கிக்கொண்டு வருகிறோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு முடிந்தால் திருப்பத்தூரில் ஒரு கட்டடத்தினை எடுத்து விற்பனை நிலையத்தினைச் செயல்படுத்த ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 168, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

168—

ஆரம்ப சுகாதார நிலையம்

***11355—திரு. ஆ. கோவிந்தசாமி:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—